**செய்தி வெளியீடு எண்: 460** **நாள்: 16.07.2018**

# செய்தி வெளியீடு

தமிழ்நாடு பி.எட். சேர்க்கை 2018-19 ஒற்றைச் சாளர முறையிலான கலந்தாய்வு 7 அரசு கல்வியியல் கல்லூரிகளுக்கும், 14 அரசு உதவி பெறும் கல்வியியல் கல்லூரிகளுக்கும் என 21 கல்வியியல் கல்லூரிகளுக்கு 1707 இடங்களுக்கு 18.07.2018 முதல் 24.07.2018 வரை முதற் கட்ட கலந்தாய்வு விலிங்டன் சீமாட்டி கல்வியியல் மேம்பாட்டு நிறுவனத்தில் நடைபெறும். 18.07.2018 அன்று சிறப்புப் பிரிவினருக்கும், 19.07.2018 முதல் பொதுப் பிரிவினருக்கும் கலந்தாய்வு நடைபெறும். 6669 விண்ணப்பங்கள் விற்பனை செய்யப்பட்டதில் 6073 விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யப்பட்டு பெறப்பட்டன. முதற் கட்ட கலந்தாய்விற்கு 4023 மாணவர்களுக்குக் கீழ்க்கண்ட கால அட்டவணையின்படி கலந்தாய்வு கடிதம் அனுப்பப்பெற்றுள்ளது. குறுஞ்செய்தியும் அனுப்பப்பட்டுள்ளது. கலந்தாய்வில் பங்கேற்க வருவோர், 'The Secretary, Tamilnadu B.Ed. Admission, Chennai." என்ற பெயரில் கலந்தாய்வு கட்டணத்தை வங்கி வரைவோலையாக கொண்டு வரவேண்டும். ஆதிதிராவிடர் (SC), பழங்குடியினருக்கு (ST) ரூ.1000, மற்றவர்களுக்கு ரூ. 2000 கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

| தமிழ்நாடு பி.எட். சேர்க்கை 2018-19<br>ஒற்றைச்சாளர முறை கலந்தாய்வு<br>முதற் கட்ட கலந்தாய்வு | | |
|---|---|---|
| **நாள்** | **துறை (Pedagogy subjects)<br>காலை 9.00 மணி** | **துறை (Pedagogy subjects)<br>மதியம் 1.00 மணி** |
| 18.07.2018 | பார்வைக் குறைபாடுடையோர் (VC), மாற்றுத்திறனாளி (PH) | முன்னாள் இராணுவ வீரரின் வாரிசுகள் (Ex-servicemen), பொறியியல் மாணவர்கள் (B.E./B.Tech.) |
| 19.07.2018 | தமிழ் | ஆங்கிலம் |
| 20.07.2018 | தாவரவியல் | விலங்கியல் |
| 21.07.2018 | இயற்பியல் | வரலாறு |
| 22.07.2018 | வேதியியல் | மனையியல்<br>பொருளியல்<br>வணிகவியல் |
| 23.07.2018 | புவியியல்<br>கணிப்பொறி அறிவியல் | கணிதம் (ஆண்கள்) |
| 24.07.2018 | கணிதம் (பெண்கள்) | கணிதம் (பெண்கள்)<br>சீர் மரபினர் (ST) |

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**